தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 18-10-2016

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## பண்டிகை காலத்தில் தேங்காய் விலை உயர வாய்ப்பு

வேளாண் அமைச்சகத்தின் இரண்டாம் முன்கூட்டிய மதிப்பீட்டின்படி,2015-16 ஆம் ஆண்டு 2.10 மில்லியன் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 14,721 மில்லியன் தேங்காய்கள் உற்பத்தி செய்யப்பட்டது. தமிழ்நாட்டில், 2014-15 ஆம் ஆண்டில் தேங்காய் 0.46 மில்லியன் எக்டர் பரப்பளவில் பயிரிடபட்டு 6,917 மில்லியன் தேங்காய்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், தஞ்சாவூர், கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி ஆகியவை தேங்காய் உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும்.

இந்தியாவின் தேங்காய் மற்றும் தேங்காய் பொருட்கள் சென்ற ஆண்டை விட 2015-16ல் 10.5 சதவீதம் அதிகமாகவும், ரூ.1450.24 கோடிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. காயவைத்த தேங்காய், தேங்காய் எண்ணெய், ஓடு மற்றும் கரிமம் ஆகியவற்றின் ஏற்றுமதி சென்ற வருடத்தை விட இவ்வருடத்தில் கணிசமாக உயர்ந்துள்ளது. ஐக்கிய அரபு நாடுகள், ஐக்கிய நாடுகள், குவைத் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு அதிக அளவு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

வர்த்தக மூலங்களின் படி, கடந்த பருவத்தை விட இப்பருவத்தில் சீரற்ற மழை காரணமாக உற்பத்தி குறைந்துள்ளது. எனினும், வரும் பண்டிகை காலத்தில் தேங்காய்க்கு அதிக தேவை இருப்பதால் உள்ளூர் சந்தையில் தேங்காய் விலை உயர வாய்ப்புள்ளது. தென்னிந்தியாவில் பண்டிகை காலத்தில் உண்டாகும் தேங்காய் விலை உயர்வு கொப்பரையின் விலையில் தாக்கத்தை ஏற்படுத்தாது. மற்ற மாநிலங்களில் இருந்து தேங்காய் வரத்து தற்போது தமிழகத்தில் இல்லை. ஆனால், ஆனைமலை, பொள்ளாச்சி

மற்றும் பெருந்துறை சந்தைகளுக்கு அருகில் தேங்காய் உற்பத்தி செய்யும் இடங்களிலிருந்து அதிக வரத்து வரத்துவங்கியுள்ளது.

இச்சூழலில், விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் கீழ் இயங்கி வரும் விலை முன்னறிவிப்புத் திட்டம், கடந்த 14 ஆண்டுகளாக ஈரோட்டில் உள்ள அவல் பூந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நிலவிய தேங்காய் மற்றும் கொப்பரையின் விலை மற்றும் பெருந்துறை கூட்டுறவு விற்பனை மையத்திலும்சந்தை ஆய்வுகள் மேற்கொண்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் டிசம்பர், 2016 வரை தரமான தேங்காயின் பண்ணை விலை ரூ.9/- முதல் ரூ.10/- வரை மற்றும் நல்ல தரமான கொப்பரை கிலோவுக்கு ரூ. 58/- முதல் ரூ.60/- ஆகவும் இருக்கும். எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி - 0422-2431405

<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
வாசனை மற்றும் மலைத்தோட்ட பயிர்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் - 0422-6611284

மக்கள் தொடர்பு அலுவலர்